**அ.வ.எண்: 104/2014** **நாள்: 04.08.2025**

வா.சா.2 - முனியாண்டி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>2, 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வாதி சின்னையா சேர்வை எனது அண்ணன் ஆவார். வாதி அழைத்தன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனது அண்ணன் கூறியது தான் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த மற்றொரு சகோதரர் கருப்பையா சேர்வை ஆவார். தாவா சொத்து பூர்விக சொத்தா என்றால் வாதி கிரையம் பெற்ற சொத்து ஆகும். நாகப்பன் சேர்வைக்கு நான், வாதி, கருப்பையா சேர்வை, மீனாட்சி சுந்தரம் சேர்ந்து விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் நாங்கள் எழுதிக் கொடுக்கவில்லை. 18.12.1977ல் நான், வாதி, கருப்பையா சேர்வை, மீனாட்சி சுந்தரம் ஆகியோர்கள் பதிவு செய்யப்பட்ட பாக விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் என் அண்ணன் என்ன செய்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது.

2. தாவா சொத்து சம்மந்தமாக ஏற்கனவே நீதிமன்றம் மூலம் ஏலம் விடப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கு வருவாய் துறையில் காந்திமதி பேரில் பட்டா உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா வழக்கு எத்தனை சொத்துக்களுக்காக தாக்கல் செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதி கிரையம் பெற்ற தேதி, மாதம் எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான். தாவா வழக்கில் பிரதிவாதிகளின் எதிர்வாதம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வாதிகளோ அவர் குடும்பத்தார்களோ அனுபவம் செய்யவில்லை என்றும், தாவா சொத்தை நீதிமன்ற ஏலத்தின் மூலம் நாகப்பன் என்பவர் ஏலக் கிரையம் பெற்று தனது மனைவி காந்திமதி பேரில் 24.10.1970 தேதிய பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி தற்பொழுது அவரின் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

3. வாதி எனது சகோதரர் என்பதால் நான் வழக்கின் விவரங்கள் எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது அண்ணன் வாதி வேண்டும்

என்பதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தில் வேலிகருவை மண்டி உள்ளது என்றால் சரிதான், மற்ற பாகங்களில் என் அண்ணன் விவசாயம் செய்கிறார்.

**மறுவிசாரணை:** இல்லை.